# செய்தி வெளியீடு எண்: 674 நாள்:10.11.2012

**செய்தி வெளியீடு**

கல்வியில் மேன்மை, விளையாட்டுப் போட்டிகளில் திறமை ஆகிய இரண்டும் இளைஞர் சமுதாயத்திற்கு இன்றியமையாதது. கல்வியின் மேன்மை அறிவாற்றலை வளர்க்கும். விளையாட்டுத் திறமை உடல் ஆரோக்கியத்தைப் பேணிக் காக்கும். அறிவார்ந்த மற்றும் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு கல்வி மற்றும் விளையாட்டு ஆகிய இரண்டும் இன்றியமையாதது என்பதால், இவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

விளையாட்டு விடுதிகள் துவக்குதல், தினப் பயிற்சி திட்டத்தின் மூலம் வீரர்களுக்கு முழுமையான பயிற்சி அளித்தல், பன்னாட்டு போட்டிகளில் பங்கு கொள்வதற்காக பன்னாட்டுத் தரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், விளையாட்டு வீரர்கள் பன்னாட்டு போட்டிகளில் பங்கு கொள்வதை ஊக்குவிக்கும் விதமாக ஊக்கத் தொகை வழங்குதல், உள்விளையாட்டு அரங்கங்களை அமைத்தல், கிராம விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவித்தல், பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளை தமிழகத்தில் நடத்துதல், விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு பொறியியல் கல்லூரிகளில் ஒதுக்கப்பட்டுள்ள 100 இடங்களை 500 ஆக உயர்த்தியது போன்ற எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், டென்னிஸ் விளையாட்டில், தெற்காசியாவில் நடைபெறும் முக்கிய போட்டியான சென்னை ஓபன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள், சென்னையில், தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தினால் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் இயங்கி வரும் சர்வதேச தரத்தில் உள்ள டென்னிஸ் விளையாட்டு அரங்கில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் போட்டியை நடத்துவதற்கு அரசின் சார்பில் 2005-ம் ஆண்டு முதல் அரசு மானியமாக ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் போட்டியில் உலகின் தலைசிறந்த டென்னிஸ் வீரர்களும், இந்தியாவின் தலை சிறந்த டென்னிஸ் வீரர்களும் பங்கு கொண்டு வருகின்றார்கள். இதன் மூலம், இந்தப் போட்டி, உலக அளவில் நடைபெறும் டென்னிஸ் போட்டிகளுக்கு இணையாக மக்களிடையே பெரும் வரவேற்பினை பெற்றுள்ளது.

சென்ற ஆண்டு, இந்தப் போட்டியினை நடத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கி உத்தரவிட்டார்கள். ஜனவரி 2013-ல் சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் சென்னையில் நடைபெற உள்ளன.

**2013 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சென்னை ஓபன் டென்னிஸ் விளையாட்டு போட்டிகளுக்கு வழக்கமாக அரசால் மானியமாக வழங்கப்பட்டு வந்த 1 கோடி ரூபாயை, 2 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

தமிழகத்திலிருந்து அனைத்து வகை போட்டிகளிலும் பங்குக் கொள்ளக்கூடிய விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டுமானால், கிராமங்களில் இளைஞர்களிடையே விளையாட்டுகள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தி, அவர்களுக்கு உரிய பயிற்சியும் ஊக்கமும் அளிக்கப்படவேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு, தமிழகத்திலுள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும் விளையாட்டினை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய – மாநில அரசுகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் கிராம இளைஞர் மேம்பாட்டு விளையாட்டுத் திட்டத்தின் கீழ் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. **இந்த கட்டமைப்பு வசதிகளை சிறந்த முறையில் பராமரித்து பயன்படுத்திடும் வகையிலும் கிராம மக்களிடையே விளையாட்டு ஆர்வத்தை மேம்படுத்திடும் வகையிலும், கிராம ஊராட்சி விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ஒரு கிராமத்திற்கு ரூ.20,000/- வீதம் மொத்தம் 12,524 கிராம ஊராட்சிகளுக்கு மொத்தம் ஆண்டு ஒன்றுக்கு 25.05 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

தமிழகத்தில் உள்ள வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் விளையாட்டுத் தரத்தினை உயர்த்திடும் வகையிலும், அவர்கள் தேசிய அளவில் மற்றும் பன்னாட்டு அளவில் நடத்தப்படும் போட்டிகளில் பங்கு பெறுவதற்கான திறமைகளை பெறும் வகையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கோப்பைக்கான குழு விளையாட்டு போட்டிகள் கூடைப் பந்து, வளைகோல்பந்து, கபாடி மற்றும் கையுந்துபந்து ஆகிய விளையாட்டுகளில் நடத்தப்படுகின்றன.

**அதேபோன்று, இறகுப்பந்து, மேசைப்பந்து, நீச்சல் மற்றும் டென்னிஸ் ஆகிய விளையாட்டுகளுக்கும் முதலமைச்சர் கோப்பைக்கான குழு விளையாட்டுப் போட்டிகளை நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இப்போட்டிகள் மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்துவதற்காக 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

**இந்த விளையாட்டுகளில் மாநில அளவிலான போட்டிகளில் முதல் இடத்தில் வெற்றி பெறும் விளையாட்டு வீரர் ஒவ்வொருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய், இரண்டாம் இடம் பெறும் விளையாட்டு வீரருக்கு தலா ரூ.75,000/-ரூபாய், மூன்றாம் இடம் பெறும் விளையாட்டு வீரருக்கு தலா ரூ.25,000/-ரூபாயும் ரொக்கப் பரிசாக வழங்கப்படும்.**

அரசின் இந்த நடவடிக்கைகள், தமிழகத்திலுள்ள விளையாட்டு ஆர்வலர்கள், தங்கள் திறனை வளர்த்துக் கொள்வதற்கு ஒரு உத்வேகம் அளிக்கும்.

*******

வெளியீடு :– இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள் :– 10.11.2012.